## சுருக்கம்

நுகர்வோர் பாதுகாப்பு – மாநில நுகர்வோர் குறைதீர் ஆணையத்தின் உறுப்பினர்களின் எண்ணிக்கையை உயர்த்துதல் மற்றும் ஆணையத்தின் நடவடிக்கைகளை மதுரையில் செயல்படுத்துதல் – ஆணைகள் வெளியிடப்படுகின்றன.

---

**கூட்டுறவு உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் (எச்2) துறை**

**அரசாணை (நிலை) எண். 12** **நாள்: 12.02.2010**

**படிக்கப்பட்டது :**

மாநில நுகர்வோர் குறைதீர் ஆணையத்தின் பதிவாளரின் கடிதம் ந.க.எண் அ1/435/2004 நாள் 4.10.2009 மற்றும் 04.11.2009.

––

**ஆணை:**

நுகர்வோர் பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வு கூடுதலாக ஏற்பட்டதின் காரணமாகவும், மாவட்ட நுகர்வோர் நீதிமன்றங்கள் முழுவீச்சில் செயல்பட்டுக் கொண்டிருப்பதாலும், மாநில ஆணையத்தில் தற்போது உள்ள இரண்டு உறுப்பினர்களைக் கொண்டு ஏற்கனவே நிலுவையில் இருக்கும் (backlog) வழக்குகளை விசாரிப்பது நடைமுறை சாத்தியம் இல்லை. எனவே, நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம் 1986 பிரிவு 16–ன்படி ஆணைய உறுப்பினர்களின் எண்ணிக்கையை இரண்டிலிருந்து நான்காக உயர்த்தவும், மாநில நுகர்வோர் குறைதீர் ஆணையத்தின் உறுப்பினர்களின் எண்ணிக்கை நான்காக உயர்த்தப்பட்டால், 50 விழுக்காடு உறுப்பினர்களின் எண்ணிக்கை நீதித் துறை அறிவுசார் நபர்களாக இருக்க வேண்டும் என விதிமுறைகள் உள்ளதால், கூடுதலாக இரண்டு நீதித்துறை அறிவுசார் (persons with Judicial background) நபர்கள் உறுப்பினர்களாக நியமிக்கப்படும் நேர்வில், தேவைக்கேற்ப சென்னையில் கூடுதல் கிளையாகவும் அல்லது மதுரை சுற்றுக் கிளையாகவும் சுயசார்பாக செயல்பட்டு தலைமை ஆணையத்துடன் சேர்ந்து வழக்குகளை விரைவாக முடிக்க ஏதுவாக இருக்கும் எனவும், மாநில நுகர்வோர் குறைதீர் ஆணையம் கருத்து தெரிவித்துள்ளது.

2. மேலும், ஓய்வு பெற்ற மாவட்ட நீதிபதிகளை உறுப்பினர்களாக நியமனம் செய்வதால் அவர்கள் கடைசியாக பணியில் இருக்கும் போது பெற்ற சம்பளத்திலிருந்து ஓய்வூதியம் கழித்து மீதம் உள்ள தொகையினை (last pay drawn minus pension) அவர்களின் சம்பளம் மற்றும் படியாக நிர்ணயிக்க வேண்டும். இதனால் அரசுக்கு கூடுதலாக ஆண்டுக்கு தோராயமாக ரூ.7,20,000/– செலவாகும் (தோராயமாக ரூ.30,000/– x 2 x 12 = ரூ.7,20,000/). எனவும், கூடுதலான பணியாளர்கள் ஏதும் நியமனம் தேவையில்லை என்றும் தனியாக கூடுதல் கிளை / மதுரை கிளைக்கு கட்டிடம் தேவையில்லை என்றும், தற்போது

(த.பி.பா)

சென்னையில் உள்ள மாநில ஆணையத்தின் இடத்தினையே கூடுதல் கிளைக்கும், மதுரை மாவட்ட நுகர்வோர் மன்றத்தின் கட்டிடத்தினையே மதுரை கிளைக்கும் பயன்படுத்திக்கொள்ளலாம் என்றும், தேவையைப் பொறுத்து, மாநில நுகர்வோர் குறைதீர் ஆணையம் நடைமுறை செயல்பாடுகளுக்காக இவ்வாணையத்தின் மதுரை கிளையாக அறிவிக்கை செய்யப்பப்பட வேண்டும் என்றும் தெரிவித்துள்ளது.

3. மேலே உள்ள கருத்துருக்களை அரசு கவனமுடன் ஆய்வு செய்தபின் பின்வருமாறு ஆணையிடுகிறது.

(அ) தமிழ்நாடு நுகர்வோர் பாதுகாப்பு விதிகள் 1988ல் விதி 6B எனும் புதிய விதியினை சேர்த்து மற்றும் விதி 7ல் தக்க திருத்தம் செய்து மாநில ஆணைய உறுப்பினர்களின் எண்ணிக்கையினை அதிகபட்சமாக நான்காக உயர்த்துவதற்கு அனுமதி அளிக்கப்படுகிறது. மாநில நுகர்வோர் குறைதீர் ஆணையத்தின் உறுப்பினர்களின் எண்ணிக்கையில் 50 விழுக்காடுகளுக்கு மிகாமல் நீதித்துறை அறிவுசார் நபர்களாக இருக்க விதிமுறைகள் உள்ளதால், இப்பணியிடங்களுக்கு ஓய்வு பெற்ற மாவட்ட நீதிபதிகளை நியமிக்கவும் இந்த உறுப்பினர்களுக்கு சம்பளமாக அவர்கள் கடைசியாக பெற்ற ஊதியத்திலிருந்து ஓய்வூதியம் போக மீதம் உள்ள தொகையினை வழங்கவும் அரசு ஆணையிடுகிறது. இந்த ஆணைக்கிணங்க 1988 ஆம் ஆண்டு தமிழ்நாடு நுகர்வோர் பாதுகாப்பு விதிக்கான சட்டத் திருத்தம் தனியாக வெளியிடப்படும்.

(ஆ) மாநில நுகர்வோர் குறைதீர் ஆணையம் தேவைக்கேற்ப தனது நடவடிக்கைகளை மதுரையிலிருந்தும் செயல்பட ஏதுவாக அரசு ஆணையிடுகிறது. இதற்கான அறிவிக்கை தனியாக வெளியிடப்படும்.

(இ) மாநில நுகர்வோர் குறைதீர் ஆணையத்திற்கு கூடுதல் உறுப்பினர்களை நியமிப்பதற்காக ஆண்டொன்றுக்கு ஏற்படும் கூடுதல் செலவினம் ரூ.7,20,000/– (ரூபாய் ஏழு இலட்சத்து இருபதாயிரம் மட்டும்) ஒப்பளிப்பு செய்து அரசு ஆணையிடுகிறது.

4. இச்செலவினம் கீழ்க்கண்ட கணக்குத் தலைப்பில் பற்று வைக்கப்பட வேண்டும்:-

<u>மாநில நுகர்வோர் குறைதீர் ஆணையம்</u>

2070 - 00 ஏனைய நிருவாகப் பணிகள் – 800 – ஏனைய செலவு – BJ – மாநில நுகர்வோர் குறைதீர் குழு – தலைமையிட பணியாளர்கள் – 01 சம்பளங்கள் – 09 மதிப்பூதியம்.
(கு.தொ.கு. 2070 00 800 – BJ 0196)

5. மேலே பத்தி–3 (இ)–ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினத்தினை மேற்கொள்ள கூடுதல் நிதியொதுக்கம் 2009–10 ஆம் ஆண்டுக்கான இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் ஒதுக்கீடு

(………3)

செய்யப்படும். இந்நிதியொதுக்கம் செய்ய இருப்பதை எதிர்நோக்கி மேலே பத்தி 3–ல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகையினை பெற்று வழங்க மாநில நுகர்வோர் குறைதீர் ஆணையத்தின் பதிவாளர் அவர்களுக்கு அதிகாரம் அளிக்கப்படுகிறது. மேலும் பத்தி 3–ல் அனுமதிக்கப்பட்ட இக்கூடுதல் செலவினத்திற்கான உரிய கருத்துருவை 2009–10 ஆம் ஆண்டிற்கான இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் சேர்ப்பதற்கு தவறாது உரிய நேரத்தில் நிதி துறைக்கு அனுப்பி வைக்குமாறு மாநில நுகர்வோர் குறைதீர் ஆணையத்தின் பதிவாளர் அவர்கள் அறிவுறுத்தப்படுகிறார்.

6. இவ்வரசாணை நிதித்துறையின் அ.சா. எண். 31/DS(PM)/Finance(CF&CP)/ 2010, நாள் 12.02.2010 மற்றும் கூடுதல் நிதியொதுக்கப் பேரேடு எண் 1592 (ஆயிரத்து ஐந்நூற்று தொண்ணூற்று இரண்டு) உடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

**க. சண்முகம்**
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்
பணி மேலாளர்,
அரசு மைய அச்சகம், சென்னை 79.
பதிவாளர்,
மாநில நுகர்வோர் குறைதீர் ஆணையம், சென்னை 4.
ஆணையாளர்,
உணவு பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, சென்னை 5.
பதிவாளர், சென்னை உயர்நீதிமன்றம், சென்னை 104.
பதிவாளர், சென்னை உயர்நீதிமன்றத்தின் மதுரை கிளை, மதுரை.
சம்பளக் கணக்கு அலுவலகர், சென்னை –5
மாநிலக் கணக்காயர், சென்னை 9/18.
தமிழ்வளர்ச்சி, அறநிலையம் மற்றும் செய்தி (மொழிப்பெயர்ப்பு)த்துறை, சென்னை–9.

**நகல்**
மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்களின் நேர்முக உதவியாளர், சென்னை 9.
மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் அலுலகம், சென்னை 9.
மாண்புமிகு நிதித்துறை அமைச்சர் அவர்களின் நேர்முக உதவியாளர், சென்னை 9.
மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அலுவலகம், சென்னை 9.
தலைமைச் செயலாளர் அவர்களின் தனிச் செயலாளர், சென்னை 9.
நிதித்துறை முதன்மைச் செயலாளரின் தனிச் செயலாளர், சென்னை 9.
சட்டத்துறை செயலாளரின் தனிச் செயலாளர், சென்னை 9.
நிதி (கூ,உ(ம) நுபா / வரவு செலவு (பொது 2))த் துறை, சென்னை 9.
இ.கோ. / உதிரி

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.